DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.26/2018**
Prosecution witness **PW.1 (LW.1)**

| | | | |
|---|---|---|---|
| Name | : Kannan | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : 11:45 a.m. to 12:10 p.m. | | |

**(Accused A1 absent. Petition U/s.355 of BNSS filed through Online, allowed. A2 Split upped. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10.07.2025

10.07.2025 முதல் விசாரணை

நான் குன்னூர் ஸ்டான்லிபார்க்கில் குடியிருந்து டேன்டீ-யில் உதவி மேலாளர் (தொழில் உறவு) ஆக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன்.

1) கடந்த 08.12.2016ம் தேதி மேற்படி டேன்டீயில் நான் உதவி மேலாளராக பணிபுரிந்து வந்தபோது அலுவலக பணியில் இருந்தபோது எங்களது அலுவலக வரவேற்பாளர் ஒருவர் என்னிடம் வந்து கோவை யூனியன் பேங்க் ஆப் இந்தியா கிளையிலிருந்து போன் வந்ததாகவும் அதில் எங்களது நிறுவனத்தில் மனோகரன் என்பவர் கண்காணிப்பாளராக வேலை பார்த்து வருகிறாரா என்று கேட்டதாகவும் மேலும் அவர் வீட்டுக்கடன் பெறுவதற்காக விண்ணப்பம் கொடுத்திருப்பதாகவும் அவ்வாறு அவர் பணிபுரிகிறாரா என்று தகவல் கேட்டதாகவும் என்னிடம் கூறினார். நான் வரவேற்பாளரிடம் அதுபோன்று மனோகரன் என்ற பெயரில் யாரும் நமது அலுவலகத்தில் வேலை பாக்கவில்லை என்றும் அவர் சமர்ப்பித்த ஆவணங்களின் நகலை நமக்கு அனுப்பி வைத்தால் அதை சரிபார்த்துவிட்டு சொல்வதாக கூறிவிடுமாறு கூறினேன்.

2) அன்றையதினமே மேற்படி வங்கியிலிருந்து எங்களது நிறுவனத்திற்கு ஒரு மின்அஞ்சல் வந்தது. அந்த மின்அஞ்சலில் மனோகரன் என்பவர் எங்களது அலுவலகத்தில் கண்காணிப்பாளராக வேலை பார்த்து வருவதாகவும் அவர் வீட்டுக்கடன் கேட்டு கடன் விண்ணப்பம் கொடுத்திருப்பதாகவும் அவர் சமர்ப்பித்த ஆவணங்களான டேன்டீ நிறுவனத்தின் மூலமாக வழங்கப்பட்டதாக ஒரு பணிநியமன ஆணை நகல், 2016ம் வருடம் ஆகஸ்டு மாதம் முதல் நவம்பர் மாதம் வரை நான்கு மாத சம்பளபட்டியல் நகல், 2015-2016, 2016-2017ற்கான வருமானவரித்துறை படிவம்-16 நகல், ஆசர்ட்ஸ் அன்டு லையபிளிட்டிஸ் நகல் மேலும் ஒரு நான்கு பேர்களின் முகவரி ஆகியவை இணைத்து அனுப்பப்பட்டிருந்தது.

3) அந்த ஆவணங்களை நான் பரிசீலனை செய்தபோது மேற்படி ஆவணங்கள் எதுவும் எங்களது டேன்டீ நிறுவனத்தால் வழங்கப்படவில்லை என்று தெரியவந்தது. அந்த தகவலை எங்களது நிர்வாக அதிகாரி அவர்களுக்கு நான் தெரியப்படுத்தினேன். எனவே நிர்வாக அதிகாரி அவர்கள் மேற்கண்ட ஆவணங்களை இணைத்து மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு ஒரு புகார் கொடுக்குமாறு கூறினார். மறுநாள் 09.12.2016ம் தேதி தபால் மூலமாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு மேற்படி மின்னஞ்சல் மூலம் பெறப்பட்ட நகல்களை இணைத்து எழுத்துமூலமான புகார் மனு ஒன்றை அனுப்பினேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் அது. **(அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u> - (எதிரி தரப்பில்)

1) இந்த வழக்கு தொடர்பாக கோவை யூனியன் வங்கி கிளையிலிருந்து நேரடியாக என்னிடம் யாரும் பேசவில்லை என்றால் சரிதான். மேற்படி அலுவலகத்தின் உதவி மேலாளர் என்ற முறையில் எனக்கு தனிப்பட்ட முறையில் மேற்படி வங்கியிலிருந்து தொலைபேசி அழைப்போ மின்அஞ்சலோ வரவில்லை என்றால் சரிதான் ஆனால் எங்களது அலுவலகத்திற்கு வந்தது. மேற்படி வங்கிக்கு கடிதம் மூலம் ஆவணங்களின்

நகல்களை நான் கேட்டு அனுப்பினேனா என்றால் இல்லை, அவர்கள் போன் மூலம் தகவல் கொடுத்தபோதே நகல்களை அனுப்பி வைக்குமாறு தகவல் கொடுத்தோம்.

2) மேற்படி வங்கியிலிருந்து மனோகரன் என்பவரது விவரம் கேட்டு பதிவுத்தபால் அல்லது சாதாரண தபாலோ வந்ததா என்றால் இல்லை, மின்அஞ்சல் தான் வந்தது. 08.01.2017ம் தேதி ஆய்வாளர் என்னை எங்களது அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்கள். போலிசார் விசாரணையின் போதுமனோகரன் என்பவர் வேலை செய்கிறாரா இல்லையா என்றும் இது உண்மையான ஆவணங்களா அல்லது போலி ஆவணங்களா என்று அறிக்கை கேட்டு எனக்கு ஒரு கடிதம் வந்தது என்ற சொல்லியுள்ளேனா என்றால் ஆம், சொல்லியுள்ளேன். அந்த கடிதம் தான் மின்அஞ்சல் மூலம் வந்தது ஆகும். ஆய்வாளரிடம் மின்அஞ்சலின் நகலையோ அல்லது மேற்படி வங்கியிலிருந்து அனுப்பப்பட்ட இதர ஆவணங்களின் நகலையோ கொடுத்தேனா என்றால் இல்லை ஆனால் எனது புகார் மனுவுடன் இணைத்து அனுப்பியிருந்தேன்.

3) 08.12.2016ம் தேதியே மேற்படி வங்கியிலிருந்து மின்அஞ்சல் அனுப்பப்பட்டதென்றால் சரிதான் ஆனால் 09.12.2016ம் தேதி தான் நாங்கள் அதை பரிசீலனை செய்தோம். லோகல் போலிஸ் ஸ்டேசனில் நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் 09.12.2016ம் தேதி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கு புகார் அனுப்பியிருந்தால் 08.01.2017 வரை வழக்க பதிவுசெய்யாமல் இருந்திருக்க மாட்டார்கள் என்றால் சரியல்ல. சம்பந்தப்பட்ட வங்கிக்கு எதிரி மனோகரன் எங்களது நிறுவனத்தில் வேலை பார்க்கவில்லை என்று வாய்மொழியாக தகவல் சொன்னோம். வங்கியிடமிருந்து மேற்படி ஆவணங்களின அசலை வாங்கி பார்த்தோமா என்றால் இல்லை.

4) எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரிய்லல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

/ஒப்பம்/ R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.26/2018**
Prosecution witness **PW.2 (LW.2)**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : Balakrishnan | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : 12:10 p.m. to 12:15 p.m. | | |

**(Accused A1 absent. Petition U/s.355 of BNSS filed through Online, allowed. A2 Split upped. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10.07.2025
10.07.2025 முதல் விசாரணை

நான் குன்னூர் கோடமலை எஸ்டேட்டில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக கண்டுள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான்.

1) 08.01.2017ம் தேதி ஒரு புகார் கொடுப்பதற்காக மேல்குன்னூர் காவல்நிலையத்திற்கு இரவு 07.00 மணிக்கு நானும் எனது மாமாவின் மகன் மணியும் சென்றிருந்தோம். நாங்கள் புகார் கொடுத்தபோது போலிசார் எங்களது விலாசத்தை கேட்டு குறித்துக்கொண்டு ஒரு கையொப்பம் வாங்கினார்கள். அதன்படி நானும் மணியும் கையொப்பம் செய்து கொடுத்தோம். எதற்காக அந்த கையொப்பம் செய்து கெடுத்தோம் என்று தெரியாது. (**1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் கண்டுள்ள அ.சா.2ன் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ்சாட்சியாக்கப்பட்டு அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

1) போலிசார் விசாரணையில் 08.01.2017ம் தேதி மாலை 05.45 மணிக்கு நானும் எனது நண்பர் மணியும் மேல்குன்னூர் காவல்நிலையத்திற்கு ஒரு சொந்த பிரச்சனையாக காவல் ஆய்வாளரை பார்க்க சென்றபோது மேற்படி காவல்நிலையத்தில் எதிரி மனோகரனை போலிசார் விசாரித்து என் முன்பாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்தார்கள் என்றும் அதில் நானும் எனது நண்பர் மணியும் கையொப்பம் செய்ததாக கூறிவிட்டு தற்போது போலிசார் விசாரணையில் கூறியுள்ளதற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிர்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.

/ஒப்பம்/ R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.26/2018**
Prosecution witness **PW.3 (LW.3)**

| | | | |
|---|---|---|---|
| Name | : Mani | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : 12:15 p.m. to 12:20 p.m. | | |

**(Accused A1 absent. Petition U/s.355 of BNSS filed through Online, allowed. A2 Split upped. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10.07.2025

10.07.2025 முதல் விசாரணை

நான் குன்னூர் சோலடாமட்டத்தில் எஸ்டேட்டில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். அச.ா.2 பாலகிருஷ்ணன் எனது மாமா ஆவார். என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவதாக கண்டுள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான்.

1) 08.01.2017ம் தேதி எனக்கும் எனது மனைவிக்குமிடையே ஏற்பட்ட பிரச்சனை தொடர்பாக புகார் கொடுப்பதற்காக மேல்குன்னூர் காவல்நிலையத்திற்கு இரவு 07.00 மணிக்கு நானும் எனது மாமா பாலகிருஷ்ணனும் சென்றிருந்தோம். நாங்கள் புகார் கொடுத்தபோது போலிசார் எங்களது விலாசத்தை கேட்டு குறித்துக்கொண்டு ஒரு கையொப்பம் வாங்கினார்கள். அதன்படி நானும் எனது மாமா பாலகிருஷ்ணனும் கையொப்பம் செய்து கொடுத்தோம். எதற்காக அந்த கையொப்பம் செய்து கெடுத்தோம் என்று தெரியாது. (**1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் கண்டுள்ள அ.சா.3ன் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ்சாட்சியாக்கப்பட்டு அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

1) போலிசார் விசாரணையில் 08.01.2017ம் தேதி மாலை 05.45 மணிக்கு நானும் பாலகிருஷ்ணனும் மேல்குன்னூர் காவல்நிலையத்திற்கு ஒரு சொந்த பிரச்சனையாக காவல் ஆய்வாளரை பார்க்க சென்றபோது மேற்படி காவல்நிலையத்தில் எதிரி மனோகரனை போலிசார் விசாரித்து என் முன்பாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்தார்கள் என்றும் அதில் நானும் பாலகிருஷ்ணனும் கையொப்பம் செய்ததாக கூறிவிட்டு தற்போது போலிசார் விசாரணையில் கூறியுள்ளதற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிர்தரப்பில் குறுக்கு விசாரணை</u> - இல்லை.

/ஒப்பம்/ R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்.